Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Tamilnadu Association For The Rights of All Types of Differently Abled and Caregivers - TARATDAC
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | சனி, செப்டம்பர் 14, 2024 | இதழ் 154

# மெட்ரோ ரெயில் திட்ட, கல்வி நிதி பெற பிரதமரை சந்திப்பேன் முதல்வர் ஸ்டாலின்

சென்னை, 14 செப் 2024: மொத்தம் 19 நிறுவனங்களுடன் ரூ.7 ஆயிரத்து 616 கோடி முதலீட்டில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

மெட்ரோ ரெயில் திட்ட நிதி, கல்வி நிதி பெற பிரதமரை நேரில் சந்தித்து பேசுவேன் என்றும் முதலமைச்சர் கூறினார்.

தமிழ்நாட்டிற்கு புதிய தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக அமெரிக்க நாட்டிற்கு அரசு முறை பயணம் மேற்கொண்டு இன்று (14 ந் தேதி) சென்னை திரும்பிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களை சந்தித்து பேட்டி அளித்தார்.

இது வெற்றிகரமான பயணமாகவும், இன்னும் சொல்லப்போனால் ஒரு சாதனைக்குரிய பயணமாகவும் அமைந்திருந்தது. தனிப்பட்ட எனக்கு அல்ல, தமிழ்நாட்டு மக்களுக்கான ஒரு சாதனைப் பயணமாக இந்தப் பயணம் அமைந்திருக்கிறது என்பதை முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

உலக நாடுகளில் இருக்கக்கூடிய தொழில் நிறுவனங்கள், தமிழ்நாட்டில் தங்களுடைய தொழில்களை துவங்குவதற்கு தொழில் முதலீடுகளை செய்ய வைப்பதற்கான முயற்சியின் ஒரு பகுதியாக கடந்த 28.8.2024 அன்று நான் அமெரிக்கா சென்றேன். 12.9.2024 வரை அங்கே இருந்திருந்தேன். இந்த 14 நாட்களும் மிகப் பெரிய பயனுள்ளதாக இந்தப் பயணம் அமைந்திருந்தது.

உலகின் புகழ்பெற்ற தலைசிறந்த 25 நிறுவனங்களுடன் நான் சந்திப்பை நடத்தியிருக்கிறேன். இதில் 18 நிறுவனங்கள், பார்ச்சூன் 500 நிறுவனங்கள் ஆகும். இந்த சந்திப்புகளின் போது, 19 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளது.

சான் பிரான்சிஸ்கோவில் 8 நிறுவனங்களுடனும், சிகாகோவில் 11 நிறுவனங்களுடனும் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன. இந்த 19 ஒப்பந்தங்கள் மூலமாக 7 ஆயிரத்து 616 கோடி முதலீடு தமிழ்நாட்டுக்கு வந்திருக்கிறது. இதன் மூலம் 11 ஆயிரத்து 516 பேருக்கு புதிய வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டிருக்கிறது.



இந்த முதலீடுகள், திருச்சி, மதுரை, கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் என்று பல்வேறு மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட உள்ளன.

கடந்த 29.8.2024 அன்று சான் பிரான்சிஸ்கோ நகரில் முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தப்பட்டது. இதில் 100-க்கும் மேற்பட்ட முன்னணி நிறுவனங்கள் மற்றும் நிறுவனத் தலைவர்கள் பங்கேற்றார்கள்.

தமிழ்நாடு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற இலக்கை நோக்கி முன்னேறுவதற்கான பணியில் பன்னாட்டு நிறுவனங்கள் தமிழ்நாடு அரசுடன் ஒன்றிணைந்து செயல்படவேண்டும் என்று இந்த நிறுவனங்களை நான் கேட்டுக் கொண்டேன். இன்னும் பல நிறுவனங்கள் வருங்காலத்தில் தமிழ்நாட்டுக்கு வருவதாக விருப்பம் தெரிவித்துள்ளார்கள்.

இதற்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல, தமிழ்நாட்டில் 30 ஆண்டு காலமாக செயல்பட்டு, தவிர்க்க இயலாத சில சூழ்நிலைகளால் உற்பத்தியை நிறுத்திய ஃபோர்டு நிறுவனம், எங்களது வேண்டுகோளை ஏற்று, சென்னை மறைமலை நகரில் உள்ள தொழிற்சாலையில் மீண்டும் உற்பத்தியை துவக்க முன்வந்துள்ளது. அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு பேசும்போது, அந்த நிறுவனத்தைச் சார்ந்தவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், கமிட்டி அமைத்து, உறுப்பினர்களுடன் பேசிவிட்டு அதற்குப் பிறகு சொல்கிறோம் என்று சொன்னார்கள்.

அதற்குப் பிறகு நாங்கள் எங்களுடைய விருப்பத்தை அதிகமாக தெரிவித்த காரணத்தினால் அனைத்து வசதிகளும் உங்களுக்கு செய்து கொடுக்கிறோம் என்ற அந்த நம்பிக்கையை ஏற்றுக்கொண்டு, சரி நீங்கள் செல்லுங்கள், இரண்டு நாட்களுக்குப் பிறகு அதற்கான மகிழ்ச்சியான செய்தியை நிச்சயம் அனுப்புகிறோம் என்று சொன்னார்கள்.

நாங்கள் சிகாகோ விமான நிலையத்தில் விமானத்தில் உட்கார்ந்த பிறகு அறிவித்துவிட்டார்கள் என்ற செய்தி கிடைத்தது. அந்த செய்தியை இன்றைக்கு உங்களுடன் நான் மகிழ்ச்சியோடு பகிர்ந்து கொள்கிறேன். தமிழ்நாடு அரசு சார்பிலும், தமிழ்நாட்டு மக்களின் சார்பிலும் இந்த முடிவை மகிழ்ச்சியோடு வரவேற்று, அவர்கள் உற்பத்தியை துவங்குவதற்கான அனைத்து உதவிகளையும் வழங்குவதற்கு நான் ஆணையிட்டிருக்கிறேன்.

அதேபோல, எனது கனவு திட்டமான, 'நான் முதல்வன்' திட்டத்தின் வழியாக தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு திறன் மேம்பாடு மேற்கொண்டு, அதன் மூலம் வளமான எதிர்காலத்தை உருவாக்கும் வகையில், செயற்கை நுண்ணறிவு, தொழில்நுட்பம் பற்றிய பயிற்சிகள் வழங்கப்படுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கூகுள் நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்பட இருக்கிறது.

ஆட்டோடெஸ்க் நிறுவனத்துடன் தமிழ்நாட்டு இளைஞர்களின் திறன்களை மேம்படுத்துவதற்காகவும், குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (விஷிவிணி) மற்றும் ஸ்டார்ட்அப்கள் உள்ளிட்ட தொழில்துறை சுற்றுச்சூழல் அமைப்புகளில் போட்டித் தன்மையை மேம்படுத்துவதற்கும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்மூலம், தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கும், வணிகம் புரிவதற்கும் உகந்த சூழ்நிலையை நிலவுவது மட்டுமல்லாமல், உலகெங்கிலும் இருக்கக்கூடிய முதலீட்டாளர்கள் முதலீடு மேற்கொள்ள விரும்பும் மாநிலமாகவும் தமிழ்நாடு திகழ்ந்து வருவது நிரூபிக்கப்பட்டுள்ளது.

31.8.2024 அன்று சான் பிரான்சிஸ்கோவிலும், 7.9.2024 அன்று சிகாகோ நகரிலும் நடைபெற்ற தமிழ் கூட்டமைப்பு மற்றும் தமிழ் சங்கங்களின் சார்பில் நடைபெற்ற அமெரிக்க வாழ் தமிழர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றினேன். இது தமிழ்நாட்டில் நான் இருப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தியது. அமெரிக்க தமிழ் அமைப்புகள் அனைத்துக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒப்பந்தங்கள் செய்துள்ள அனைத்து நிறுவனங்களுக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

## முதல்வரின் சான்பிரான்ஸ்கோ மற்றும் சிகாகோ நகரில் நடத்தப்பட்ட சந்திப்புகளின் பலனாக ரூபாய் 7616 கோடி முதலீடுகளை ஈர்த்து 11,516 நபர்களுக்கு வேலை வாய்ப்பு பெறுகிற வகையில் முதலமைச்சரின் முயற்சிகள் வெற்றி பெற்று மகத்தான சாதனை படைக்கப்பட்டுள்ளது - கு. செல்வப்பெருந்தகை

சென்னை, 14 செப் 2024: தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பேற்ற திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக தமிழகத்தை அனைத்து துறைகளிலும் வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்கிற வகையில் மிகச் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறார். தமிழகத்தில் தொழில் வளர்ச்சியை ஏற்படுத்தி, வேலை வாய்ப்புகளை பெருக்குவதற்காக உள்ளூர் முதலீடுகளை திரட்டுகிற அதேநேரத்தில், அந்நிய முதலீடுகளை ஈர்ப்பதற்காக சென்னையில் அந்நிய முதலீட்டாளர்கள் மாநாட்டையும், வெளிநாடுகளுக்கு பயணம் மேற்கொண்டு முதலீடுகளை ஈர்ப்பதற்கு பெரும் முயற்சிகளை மேற்கொண்டு மிகப்பெரிய வெற்றியை பெற்று வருகிறார். இந்நிலையில் கடந்த ஆகஸ்ட் மாதம் 27 ஆம் தேதி அமெரிக்க பயணத்தை மேற்கொண்டு சான்பிரான்ஸ்கோ மற்றும் சிகாகோ நகரில் நடத்தப்பட்ட சந்திப்புகளின் பலனாக ரூபாய் 7616 கோடி முதலீடுகளை ஈர்த்து 11,516 நபர்களுக்கு வேலை வாய்ப்பு பெறுகிற வகையில் முதலமைச்சரின் முயற்சிகள் வெற்றி பெற்று மகத்தான சாதனை படைக்கப்பட்டுள்ளது.



உலகின் முன்னணி நிறுவனங்களாக விளங்கும் மைக்ரோசிப், கூகுள், பேபால், நோக்கியா, கேட்டர்பில்லர், அப்லைட் மெட்டீரியல்ஸ், ஈட்டன், அஷ்யூரன்ஸ், ராக்வெல் போன்ற உலகத்தரம் வாய்ந்த நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் முதல்வர் கையெழுத்திட்டிருக்கிறார். அதேபோல, போர்ட் நிறுவனம் சென்னை மறைமலை நகரில் தொடங்கப்பட்ட உற்பத்தியை நிறுத்திய நிலையில் மீண்டும் வாகன உற்பத்தியை தொடங்கவதற்கான ஒப்புதலை பெற்றிருக்கிறார். இதனால் 12,000 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. ஒசூரில் மின்னணு உற்பத்தி நிறுவனம் அமைக்க முதல்வர் முன்னிலையில் ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. அமெரிக்க பயணத்தில் நாள்தோறும் தொழில் முதலீடுகளை ஈர்க்கிற வகையில் புரிந்துணர்வு ஒப்பந்த செய்திகள் தமிழக நாளேடுகளில் தலைப்புச் செய்திகளாக வருவதை பார்த்து ஒட்டுமொத்த தமிழக மக்களே மகிழ்ச்சி கடலில் ஆழ்ந்து வருகிறார்கள். அமெரிக்க பயணத்தை வெற்றிகரமாக முடித்து தாயகம் திரும்புகிற போது சிகாகோ விமான நிலையத்தில் ஏராளமான அமெரிக்க வாழ் தமிழர்கள் முதல்வரை மகிழ்ச்சியோடு வழியனுப்பி வைத்தனர். இந்திய - அமெரிக்க நாட்டு தொழில் முனைவோருக்கிடையே தொழில் முதலீடுகளை ஈர்த்து உறவுப் பாலம் அமைத்த தமிழக முதலமைச்சரை இன்றைக்கு நாடே பாராட்டிக் கொண்டிருக்கிறது.

இந்தியாவிலேயே தொழில் வளர்ச்சியிலும், முதலீடுகளை ஈர்ப்பதிலும் முதன்மை மாநிலமாக தமிழ்நாட்டை உயர்த்துகிற முயற்சியில் தமிழக முதல்வரை பாராட்டுவது நமது கடமையாகும். மூன்றாண்டு காலத்தில் மட்டும் ஏற்கனவே 872 புரிந்துணர்வு ஒப்பந்தங்களும், ஏறத்தாழ 10 லட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள முதலீடுகளும், 18 லட்சத்து 89 ஆயிரத்து 234 நபர்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைப்பது உறுதி செய்யப்பட்டிருக்கிறது. இதில் 234 திட்டங்கள் உற்பத்தியை தொடங்கி விட்டது. 4 லட்சத்து 16 ஆயிரத்து 717 பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டு விட்டது. மற்ற ஒப்பந்தங்களும் படிப்படியாக தொடர்ந்து செயல்பாட்டுக்கு வரும் என்ற உறுதியை முதலமைச்சர் வெளிப்படுத்தியிருக்கிறார். உலகின் புகழ் பெற்ற நிறுவனங்களின் பட்டியலில் உள்ள 500 பார்ச்சூன் நிறுவனங்களில் 19 நிறுவனங்களில் இருந்து முதலீடுகளை ஈர்த்து முதலமைச்சர் சாதனை படைத்திருக்கிறார். இந்தியாவிலேயே தமிழகத்தை தொழில் வளர்ச்சியிலும், வேலை வாய்ப்பிலும் முன்னணி மாநிலமாக உயர்த்துகிற முயற்சியில் அமெரிக்க பயணத்தின் மூலம் முதலீடுகளுக்கான ஒப்பந்தங்களை போட்டு இன்று தமிழகம் திரும்பும் அவரை 'முதலீடுகளை ஈர்த்த முதல்வரே வருக வருக" என தமிழக மக்கள் அனைவரும் ஓரணியில் திரண்டு வரவேற்க கடமைப்பட்டுள்ளார்கள். அமெரிக்க பயணத்தின் ஒவ்வொரு நாளையும் கடமை உணர்ச்சியோடு தமிழகத்தை வளர்த்தெடுக்க வேண்டுமென்ற மிகுந்த ஈடுபாட்டுடன் தனது பணிகளை மனநிறைவோடு செய்து சென்னை திரும்புகிற தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களையும், அவருக்கு பெரும் துணையாக இருந்து மிகச் சிறப்பாக செயல்பட்ட தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா உள்ளிட்ட அரசு அதிகாரிகளையும் தமிழ்நாடு காங்கிரஸ் சார்பாக பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் பயணத்தின் வெற்றி தமிழகத்திற்கு கிடைத்த வெற்றி. தமிழகத்தின் வளர்ச்சிக்கும் வேலை வாய்ப்பிற்கும் கிடைத்த வெற்றி. தமிழ் கூறும் நல்லுலகமே உங்களை மிகுந்த மகிழ்ச்சியுடன் வாழ்த்துகிறது, போற்றுகிறது.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

# நெல்லையில் கல்லூரி மாணவியை மது குடிக்க அழைத்த பேராசிரியர் கைது



சென்னை, 14 செப் 2024: நெல்லையில் கல்லூரி மாணவியை மது குடிக்க அழைத்த பேராசிரியர் கைது செய்யப்பட்டார்.

நெல்லை மாநகர பகுதியில் செயல்பட்டுவரும் ஒரு கல்லூரியில் மாணவி ஒருவர் முதுகலை பட்டப்படிப்பு படித்து வருகிறார். அந்த கல்லூரியின் பேராசிரியர்கள் இரண்டு பேர் சம்பவத்தன்று இரவு, சம்பந்தப்பட்ட கல்லூரி மாணவியின் செல்போனுக்கு கால் செய்துள்ளனர்.

அப்போது, அந்த கல்லூரி மாணவியிடம், 2 ஆசிரியர்களும் விரும்பத்தகாத வகையில் பேசியதோடு மது குடிப்பதற்கும் அழைத்துள்ளனர். இதனால் அதிர்ச்சி அடைந்த அந்த மாணவி, நடந்த சம்பவங்கள் குறித்து தனது பெற்றோரிடம் எடுத்துரைத்துள்ளார். ஆத்திரம் அடைந்த பெற்றோர் பாளையங்கோட்டை போலீசில் புகார் அளித்தனர்.

இதன் அடிப்படையில் விசாரணையை தொடங்கிய போலீசார், பேராசிரியர்களான பால்ராஜ் மற்றும் ஜெபஸ்டின் மீது 3 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்தனர். இதில் ஜெபஸ்டின் என்ற பேராசிரியரை போலீசார் கைதுசெய்துள்ளனர். பால்ராஜை போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர். முன்னதாக குற்றம் சாட்டப்பட்ட இரண்டு பேராசிரியர்களையும் கல்லூரி நிர்வாகம் இடைநீக்கம் செய்தது குறிப்பிடத்தக்கது.

# தி.மு.க. அரசுக்கு எதிராக விழுப்புரத்தில் 20ந் தேதி ஆர்ப்பாட்டம்: எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு




சென்னை, 14 செப் 2024: விழுப்புரம் நகராட்சி, மருதூர் பகுதியில் உள்ள இடுகாட்டை ஆக்கிரமித்து பாதாள சாக்கடை சுத்திகரிப்பு நிலையம் அமைக்க இருப்பதை உடனடியாகக் கைவிட வலியுறுத்தியும்; கள்ளச் சாராயம் மற்றும் போதைப் பொருட்கள் புழக்கத்தைக் கட்டுப்படுத்தத் தவறிய மாவட்ட காவல் துறையைக் கண்டித்தும், விழுப்புரம் மாவட்ட அண்ணா தி.மு.க. சார்பில் 20 ந் தேதி வெள்ளிக் கிழமை மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளரும், முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

திமுக அரசு, விழுப்புரம் நகராட்சி, மருதூர் பகுதியில் உள்ள நகராட்சி இடுகாட்டை ஆக்கிரமித்து பாதாள சாக்கடை சுத்திகரிப்பு நிலையம் அமைக்க இருப்பதாகவும், அவ்வாறு அந்த இடத்தில் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டால் இடுகாட்டிற்கு இடப் பற்றாக்குறை ஏற்படுவதுடன், அந்த இடத்தை முற்றிலும் பயன்படுத்த முடியாத நிலை உருவாகும். இதன் காரணமாக மக்களுக்கு பல்வேறு சிரமங்கள் ஏற்படும்.

விழுப்புரம் நகராட்சிக்கு உட்பட்ட இடங்களில் வசிக்கும் மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் குடிநீரில் சாக்கடை நீர் கலப்பது; நாள்தோறும் குவிந்து வரும் குப்பைகள் அகற்றப்படாதது; விழுப்புரம் மையப் பகுதியில் அமைந்துள்ள கோலியனூரான் வாய்க்கால் சீரமைக்கப்படாததால் சாக்கடையாகவும், குப்பைக் கூடாரமாகவும் மாறியுள்ளது. இவைகளின் காரணமாக நகராட்சிப் பகுதிகளில் சுகாதார சீர்கேடு ஏற்பட்டு மக்கள் மிகுந்த சிரமத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

இரவு நேரங்களில் மின் விளக்குகள் சரியாக எரியாத காரணத்தால் மக்கள் மிகுந்த அவதிப்படுகின்றனர். நகராட்சிப் பகுதிகளில் உள்ள சாலைகள் குண்டும், குழியும், சேரும், சகதியுமாக இருப்பதால், சாலைகளில் பயணம் செய்வதற்கு மக்கள் மிகுந்த சிரமப்படுகின்றனர்.

விழுப்புரம் மாவட்டத்தில் கள்ளச் சாராயம் மற்றும் போதைப் பொருட்கள் விற்பனை சர்வ சாதாரணமாக நடைபெறுவதாகவும், இதன் காரணமாக பலர் போதைப் பொருட்களுக்கு அடிமையாகி உயிரிழக்கும் பரிதாப நிலை இருப்பதாகவும், கள்ளச் சாராயம் மற்றும் போதைப் பொருட்கள் புழக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு மாவட்டக் காவல் துறை எவ்வித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை என மக்கள் வேதனையுடன் தெரிவிக்கின்றனர்.

மக்கள் நலனில் சிறிதும் அக்கறை இல்லாத திமுக அரசின் மெத்தனப் போக்கிற்கு எனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விழுப்புரம் நகராட்சி, மருதூர் பகுதியில் உள்ள இடுகாட்டை ஆக்கிரமித்து பாதாள சாக்கடை சுத்திகரிப்பு நிலையம் அமைக்க இருப்பதை உடனடியாகக் கைவிட வலியுறுத்தியும்;

நகராட்சியில் நிலவி வரும் சுகாதார சீர்கேடுகள் மற்றும் நிர்வாக சீர்கேடுகளுக்குக் காரணமான திமுக அரசு மற்றும் நகராட்சி நிர்வாகத்தைக் கண்டித்தும்; மக்கள் நலன் கருதி, இங்கு நிலவி வரும் சுகாதார சீர்கேடுகளை போர்க்கால அடிப்படையில் நிவர்த்தி செய்திட வலியுறுத்தியும்; குண்டும் குழியுமாக உள்ள சாலைகளை சரிசெய்திடக் கோரியும்;

கள்ளச் சாராயம் மற்றும் போதைப் பொருட்கள் புழக்கத்தைக் கட்டுப்படுத்தத் தவறிய மாவட்ட காவல் துறையைக் கண்டித்தும், அண்ணா தி.மு.க. விழுப்புரம் மாவட்டத்தின் சார்பில், 20 ந் தேதி வெள்ளிக் கிழமை காலை 10 மணியளவில், விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில், கழக அமைப்புச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான சி.வி. சண்முகம், எம்.பி. தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில், விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த தலைமைக் கழகச் செயலாளர், கழக சட்டமன்ற உறுப்பினர்கள், சார்பு அமைப்புகளின் துணை நிர்வாகிகள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டத்தில் பல்வேறு நிலைகளில் பணியாற்றி வரும் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் முன்னாள் பிரதிநிதிகளும், கழக உடன்பிறப்புகளும் பெருந்திரளாகக் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில், வியாபாரிகள், தொழிலாளர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளான அளவில் கலந்துகொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

# சாம்சங் கேலக்ஸி எஸ்24 அல்ட்ராவில் உற்சாகமான வரையறுக்கப்பட்ட கால சலுகையை அறிவிக்கிறது; இப்போது இந்தியாவில் ரூ.109999 முதல் கிடைக்கிறது




சென்னை, 14 செப் 2024: இந்தியாவின் மிகப்பெரிய நுகர்வோர் மின்னணு பிராண்டான சாம்சங், அதன் முதன்மையான கேலக்ஸி எஸ்24 அல்ட்ரா ஸ்மார்ட்போனில் இதுவரை கண்டிராத விலையை இன்று அறிவித்துள்ளது. செப்டம்பர் 12, 2024 முதல், கேலக்ஸி எஸ்24 அல்ட்ரா ஆனது ஒரு குறிப்பிட்ட கால சலுகையின் ஒரு பகுதியாக வெறும் ஐ என் ஆர் 109999 இல் கிடைக்கும். ஸ்மார்ட்போனின் அசல் விலை ஐ என் ஆர் 129999 இல் தொடங்கப்பட்டது. சிறப்பு விலையில் ஐ என் ஆர் 8000 இன் உடனடி கேஷ்பேக் மற்றும் ஐ என் ஆர் 12000 கூடுதல் மேம்படுத்தல் போனஸ் அடங்கும். மாற்றாக, வாடிக்கையாளர்கள் ஐ என் ஆர் 12000 வங்கி கேஷ்பேக்கையும் பெறலாம். கூடுதலாக, மேம்பட்ட மலிவு விலையை விரும்பும் நுகர்வோர் வாங்கலாம். 24 மாதங்களுக்கு கட்டணமில்லா ஈஎம்ஐ இன் நன்மை. கேலக்ஸி எஸ்24 அல்ட்ரா ஆனது மொபைல் ஏஐ இன் புதிய சகாப்தத்தை அறிமுகப்படுத்துகிறது, வாடிக்கையாளர்களுக்கு கேலக்ஸி ஏஐ உடன் மேலும் பலவற்றைச் செய்ய உதவுகிறது. கேலக்ஸி எஸ்24 அல்ட்ரா ஆனது ஃபோனின் மிக அடிப்படையான பங்கை மேம்படுத்துகிறது மற்றும் மறுவரையறை செய்கிறது: நேரடி மொழிபெயர்ப்புடன் தொடர்பு, இருவழி, நிகழ்நேர குரல் மற்றும் சொந்த பயன்பாட்டிற்குள் தொலைபேசி அழைப்புகளின் உரை மொழிபெயர்ப்பு. மொழிபெயர்ப்பாளர் மூலம், நேரடி உரையாடல்களை ஸ்பிளிட்-ஸ்கிரீன் காட்சியில் உடனடியாக மொழிபெயர்க்கலாம். இது செல்லுலார் தரவு அல்லது செய்திகள் மற்றும் பிற பயன்பாடுகளுக்கான வைஃபை இல்லாமல் கூட வேலை செய்கிறது. கூடுதலாக, அரட்டை உதவியானது சரியான உரையாடல் டோன்களுக்கு உதவும், இது நோக்கம் கொண்ட தகவல்தொடர்பு ஒலிகளை உறுதிப்படுத்துகிறது. சாம்சங் கீபோர்டில் உள்ளமைக்கப்பட்ட ஏஐ ஆனது இந்தி உட்பட 13 மொழிகளில் செய்திகளை நிகழ்நேரத்தில் மொழிபெயர்க்கலாம்.

சாம்சங் குறிப்புகளில் நோட் அசிஸ்ட் அம்சத்துடன், பயனர்கள் ஏஐ-உருவாக்கப்பட்ட சுருக்கங்களைப் பெறுகிறார்கள் மற்றும் முன் தயாரிக்கப்பட்ட வடிவங்களுடன் குறிப்புகளை ஒழுங்குபடுத்தும் டெம்ப்ளேட்களை உருவாக்குகிறார்கள். குரல் பதிவுகளுக்கு, பல ஸ்பீக்கர்கள் இருக்கும்போது கூட, டிரான்ஸ்கிரிப்ட் அசிஸ்ட் ஏஐ மற்றும் ஸ்பீச்-டு-டெக்ஸ்ட் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பதிவுகளை டிரான்ஸ்கிரிப்ட் செய்யவும், சுருக்கவும் மற்றும் மொழிபெயர்க்கவும் பயன்படுத்துகிறது. கேலக்ஸி எஸ்24 அல்ட்ரா ஆனது கூகுள் உடன் 'சர்க்கிள் டு சர்ச்' பெறுகிறது. கேலக்ஸி எஸ்24 அல்ட்ரா ஆனது றிகூஷ்ஷீகூஷிவீஉஷுணீறீ இன்ஜினைக் கொண்டுள்ளது, இது ஏஐ-இயங்கும் கருவிகளின் ஒரு விரிவான தொகுப்பாகும், இது படத்தைப் பிடிக்கும் திறன்களை மாற்றுகிறது மற்றும் படைப்பு சுதந்திரத்தை அதிகரிக்கிறது. கேலக்ஸி எஸ்24 அல்ட்ராவில் உள்ள குவாட் டெலி சிஸ்டம் 5எக்ஸ் ஆப்டிகல் ஜூம் லென்ஸுடன் வருகிறது, இது 50எம்பி சென்சார் மூலம் 2எக்ஸ், 3எக்ஸ், 5எக்ஸ் முதல் 10எக்ஸ் வரை ஜூம் நிலைகளில் ஆப்டிகல்-தர செயல்திறனை செயல்படுத்த, அடாப்டிவ் பிக்சல் சென்சாருக்கு நன்றி. மேம்படுத்தப்பட்ட டிஜிட்டல் ஜூம் மூலம் படங்கள் 100எக்ஸ் படிக தெளிவான முடிவுகளைக் காட்டுகின்றன. மேம்படுத்தப்பட்ட நைட்கிராஃபி திறன்களுடன், கேலக்ஸி எஸ்24 அல்ட்ரா இன் ஸ்பேஸ் ஜூமில் எடுக்கப்படும் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் எந்த நிலையிலும், பெரிதாக்கப்பட்டாலும் கூட சிறப்பாக இருக்கும். கேலக்ஸி எஸ்24 அல்ட்ரா இன் பெரிய பிக்சல் அளவு, இப்போது 1.4 யூஎம், 60% பெரியது, மங்கலான நிலையில் அதிக ஒளியைப் பிடிக்க உதவுகிறது.

கேலக்ஸி எஸ்24 அல்ட்ரா 6.8" பிளாட் டிஸ்ப்ளே கொண்டுள்ளது, இது பார்ப்பதற்கு மட்டுமல்ல, உற்பத்தித்திறனுக்காகவும் உகந்ததாக உள்ளது. இது கேலக்ஸிக்கான ஸ்னாப்டிராகன்டி 8 ஜென் 3 மொபைல் இயங்குதளத்துடன் பொருத்தப்பட்டுள்ளது, இது நம்பமுடியாத திறமையான ஏஐ செயலாக்கத்திற்கு குறிப்பிடத்தக்க என்பியூமேம்பாட்டை வழங்குகிறது. கேலக்ஸி எஸ்24 அல்ட்ரா ஆனது 2600 என்ஐடிஎஸ் உச்ச பிரகாசத்தைக் கொண்டுள்ளது. கேலக்ஸி எஸ் 24 அல்ட்ராவில் உள்ள கார்னிங் டி கொரில்லாடி ஆர்மர் ஆனது சிறந்த நீடித்துழைப்பிற்காக ஒளியியல் ரீதியாக மேம்படுத்தப்பட்டுள்ளது. இது ஒரு பரந்த அளவிலான லைட்டிங் நிலைகளில் 75% வரை வியத்தகு முறையில் குறைக்கப்பட்ட பிரதிபலிப்பை வழங்குகிறது, இது ஒரு மென்மையான, வசதியான பார்வை அனுபவத்தை உறுதி செய்கிறது. நான்கு துடிப்பான வண்ணங்களில் கிடைக்கிறது - டைட்டானியம் கிரே, டைட்டானியம் வயலட், டைட்டானியம் பிளாக் மற்றும் டைட்டானியம் மஞ்சள், கேலக்ஸி எஸ்24 அல்ட்ரா என்பது டைட்டானியம் பிரேமைக் கொண்ட முதல் கேலக்ஸி போன் ஆகும், இது சாதனத்தின் ஆயுள் மற்றும் ஆயுளை மேம்படுத்துகிறது. கேலக்ஸி எஸ்24 அல்ட்ரா இன் குறிப்பிடத்தக்க மெல்லிய உடல் மிகவும் வசதியான பிடியுடன் பயணத்தின் போது சிறந்த அனுபவத்தை வழங்குகிறது.

கேலக்ஸி எஸ்24 அல்ட்ரா ஆனது, தயாரிப்பு ஆயுளை நீட்டிப்பதில் சாம்சங்கின் உறுதிப்பாட்டை தொடர்கிறது, பயனர்கள் தங்கள் கேலக்ஸி சாதனங்களின் உகந்த செயல்திறனை இன்னும் நீண்ட காலத்திற்கு நம்பகத்தன்மையுடன் அனுபவிக்க உதவும் வகையில் ஏழு தலைமுறை ஓஎஸ் மேம்படுத்தல்கள் மற்றும் ஏழு வருட பாதுகாப்பு புதுப்பிப்புகளை வழங்குகிறது. கேலக்ஸி எஸ்24 அல்ட்ரா ஆனது சாம்சங் கேனாக்ஸ் ஆல் முக்கியமான தகவல்களைப் பாதுகாப்பதற்காகவும், இறுதி முதல் இறுதி வரையிலான பாதுகாப்பான வன்பொருள், நிகழ்நேர அச்சுறுத்தல் கண்டறிதல் மற்றும் கூட்டுப் பாதுகாப்பு மூலம் பாதிப்புகளுக்கு எதிரான பாதுகாப்பிற்காகவும் பாதுகாக்கப்படுகிறது. கேலக்ஸி எஸ்24 அல்ட்ரா அனைத்து முன்னணி ஆன்லைன் மற்றும் ஆஃப்லைன் சில்லறை விற்பனை கடைகளிலும் கிடைக்கிறது.




தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரம் வட்டம், கீழஈரால் தொன் போஸ்கோ கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இன்று (14.09.2024) தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் சார்பில் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் 2022-2023 மற்றும் 2023-2024-ம் கல்வி ஆண்டுகளில் 12-ஆம் வகுப்பு பயின்று பள்ளி இறுதி தேர்வு எழுதாதவர்கள், தேர்வு எழுதி தேர்ச்சி பெறாதவர்கள், தேர்வில் வெற்றி பெற்று உயர்கல்வி பெற கல்லூரிகளில் சேராதவர்கள் மற்றும் 8 முதல் 12-ஆம் வகுப்பில் பயிலும் போது இடைநின்ற மாணவர்களுக்கான "உயர்வுக்குப் படி" வழிகாட்டல் முகாமை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.இளம்பகவத், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார்.





"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# ஏதர் எனர்ஜி லிமிடெட், டிஆர்ஹச்பீ ஐ செபியிடம் தாக்கல் செய்கிறது.

சென்னை, 14 செப் 2024: இந்திய மின்சார இரு சக்கர வாகன (ஈ2டபிள்யூ) சந்தையில் ஒரு முன்னோடி மற்றும் இந்தியாவின் அடித்தளத்திலிருந்து அதன் அனைத்து தயாரிப்புகளையும் வடிவமைக்கும் குறிப்பிட்ட பிரிவில் கவனம் செலுத்துகின்ற ஈவிநிறுவனமான ஏதர் எனர்ஜி லிமிடெட், ஆரம்பப் பொது வழங்கல் (ஐபிஓ) மூலம் நிதி திரட்ட மூலதன சந்தை கட்டுப்பாட்டாளரான எச்ஈபீஐ யிடம் ரெட் ஹெர்ரிங் ப்ரோஸ்பெக்டஸ் (டிஆர்ஹச்பி) வரைவை தாக்கல் செய்துள்ளது. இந்த நிறுவனம் தருண் மேத்தா, ஸ்வப்னில் ஜெய்ன் மற்றும் ஹீரோ மோட்டோகார்ப் லிமிடெட் ஆகியோரால் உருவாக்கப்பட்டது.

பெங்களூருவை தலைமையிடமாகக் கொண்ட இந்த நிறுவனத்தின் ஐபிஓ ஆனது மொத்தமாக ரூ. 3,100 கோடி வரையிலான ஈக்விட்டி பங்குகளின் ஒரு புதிய வெளியீடு மற்றும் விற்பனை செய்யும் பங்குதாரர்களால் செய்யப்படும் 2,20,00,766 வரையிலான ஈக்விட்டி பங்குகளை விற்பனை செய்வதற்கான வழங்கல் (ஓஎப்எஸ்) ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

உருவாக்குநர் விற்பனை பங்குதாரர்கள் : தருண் சஞ்சய் மேத்தா, 1,000,000 வரையிலான ஈக்விட்டி பங்குகள் ; ஸ்வப்னில் பாபன்லால் ஜெயின், 1,000,000 வரையிலான ஈக்விட்டி பங்குகள்; கார்ப்பரேட் விற்பனை பங்குதாரர்கள் : கலாடியம் இன்வெஸ்ட்மென்ட் பிரைவேட் லிமிடெட், 10,520,000 வரையிலான ஈக்விட்டி பங்குகள்; நேஷனல் இன்வெஸ்ட்மென்ட் அண்ட் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் ஃபண்ட் மிமி, 4,616,519 வரையிலான ஈக்விட்டி பங்குகள்; இன்டர்நெட் ஃபண்ட் மிமிமி பிடிஈ. லிமிடெட், 4,000,000 வரையிலான ஈக்விட்டி பங்குகள்; 3 ஸ்டேட் வென்சர்ஸ் பிடிஈ லிமிடெட், 480,000 வரையிலான ஈக்விட்டி பங்குகள் ; ஐஐடிஎம் இன்குபேஷன் செல், 310,495 ஈக்விட்டி வரையிலான பங்குகள்; ஐஐடிஎம் ரூரல் டெக்னாலஜி மற்றும் பிசினஸ் இன்குபேட்டர், 41,910 வரையிலான ஈக்விட்டி பங்குகள்; தனிப்பட்ட விற்பனை பங்குதாரர்கள் : அமித் பாட்டியா, 18,531 வரையிலான ஈக்விட்டி பங்குகள்; மற்றும் கரந்தீப் சிங், 13,311 வரையிலான ஈக்விட்டி பங்குகள் ஆகியவர்கள் விற்பனை செய்யும் பங்குதாரர்களில் அடங்குவார்கள்.

மகாராஷ்டிராவில் ஈ2டபுள்யூ தொழிற்சாலையை நிறுவுவதற்கான மூலதனச் செலவுத் தேவைகளுக்கான முதலீடு (ரூ. 927.2 கோடிகள்) ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் முதலீடு (ரூ. 750 கோடி); நிறுவனத்தால் பெறப்பட்ட சில கடன்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ திருப்பிச் செலுத்துதல் அல்லது முன்கூட்டியே செலுத்துதல் (ரூ. 378.2 கோடிகள்) ; சந்தைப்படுத்தல் முயற்சிகளுக்கான செலவு (ரூ. 300 கோடிகள்); மற்றும் பொது நிறுவன நோக்கங்கள் ஆகியவற்றிற்காக இந்த புதிய வெளியீட்டின் நிகர வருமானத்தைப் பயன்படுத்த ஏதர் எனர்ஜி லிமிடெட் முன்மொழிகிறது.

ஆர்ஹச்பி-ஐ ஆர்ஓசி இல் தாக்கல் செய்வதற்கு முன், இந்த நிறுவனம் மொத்தமாக ரூ. 620 கோடி வரையிலான குறிப்பிட்ட பத்திரங்களின் முன்-ஐபிஓ ஒதுக்கீட்டை மேற்கொள்ளலாம். முன்-ஐபிஓ ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டால், இந்த புதிய வெளியீட்டு அளவு அத்தகைய முன்-ஐபிஓ ஒதுக்கீட்டின் அளவிற்கு குறைக்கப்படும்.

ஆக்சிஸ் கேபிட்டல் லிமிடெட், எச்எஸ்பிசி செக்யூரிட்டீஸ் அண்ட் கேபிடல் மார்க்கெட்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், ஜேஎம் ஃபைனான்சியல் லிமிடெட் மற்றும் நோமுரா ஃபைனான்சியல் அட்வைசரி அண்ட் செக்யூரிட்டீஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் ஆகிய நிறுவனங்கள் இந்த சலுகையின் புத்தக இயக்க முன்னணி மேலாளர்கள் ஆவர்.

இந்த ஈக்விட்டி பங்குகள் பிஎஸ்இ மற்றும் என்எஸ்இ யில் பட்டியலிட முன்மொழியப்பட்டுள்ளன.

2013 இல் நிறுவப்பட்ட, ஏதர் எனர்ஜி நிறுவனம் ஈ2டபுள்யூகள், பேட்டரி தொகுப்புகள், சார்ஜிங் உள்கட்டமைப்பு, அதனுடன் தொடர்புடைய மென்பொருள் மற்றும் துணைக்கருவிகள் ஆகியவற்றை வடிவமைத்து உருவாக்குகிறது, அத்துடன் பேட்டரி பேக்குகளை உற்பத்தி செய்கிறது மற்றும் ஈ2டபுள்யூகளை உள்நாட்டிலேயே அசெம்பிள் செய்கிறது. 2024 நிதியாண்டில், ஏதர் எனர்ஜி 109,577 ஈ2டபுள்யூகளை விற்றது மற்றும் க்ரைசில் அறிக்கையின்படி, ஈ2டபுள்யூ விற்பனையின் அளவில் மூன்றாவது பெரிய நிறுவனமாக இருந்தது.

ஏதர் இன் தற்போதைய ஈ2டபுள்யூ போர்ட்ஃபோலியோ, செயல்திறன் ஸ்கூட்டர்களை விரும்பும் வாடிக்கையாளர்களுக்காக வடிவமைக்கப்பட்ட ஏதர் 450 வரிசை மற்றும் வாடிக்கையாளர்களின் குடும்பத்திற்கு வசதியாக ஸ்கூட்டர்களை தேடும் வாடிக்கையாளர்களை இலக்காகக் கொண்ட ஏதர் ரிஸ்டா வரிசை ஆகிய இரண்டு தயாரிப்பு வரிசைகளை உள்ளடக்குகிறது. இது தமிழ்நாட்டின் ஓசூரில் அமைந்துள்ள அதன் உற்பத்தித் தொழிற்சாலைகளில் ஈ2டபுள்யூகளை அசெம்பிள் செய்கிறது மற்றும் பேட்டரி பேக்குகளை உற்பத்தி செய்கிறது.

# நார்தர்ன் ஆர்க் கேபிடல் லிமிடெட் நிறுவனத்தின் ஆரம்பப் பொது வழங்கல் செப்டம்பர் 16, 2024 திங்கட்கிழமை, அன்று திறக்கப்பட உள்ளது.

சென்னை, 14 செப் 2024: நார்தர்ன் ஆர்க் கேபிடல் லிமிடெட் ("நார்தர்ன் ஆர்க்" அல்லது "கம்பெனி"), செப்டம்பர் 16, 2024 திங்கட்கிழமை அன்று ஈக்விட்டி ஷேர்களின் ஆரம்பப் பொது வழங்கல் தொடர்பாக அதன் ஏலம்/வழங்கலைத் திறக்கும்.

இந்த ஆரம்பப் பொது வழங்கலானது, ரூ.5000 மில்லியன் வரையிலான ஈக்விட்டி பங்குகளின் ஒரு புதிய வெளியீடு ("புதிய வெளியீடு") மற்றும் விற்பனை செய்யும் பங்குதாரர்களால் 10,532,320 வரையிலான ஈக்விட்டி பங்குகளை விற்பனை செய்வதற்கான ஒரு வழங்கல் ("விற்பனைக்கான வழங்கல்" மற்றும் புதிய வெளியீட்டுடன் சேர்த்து, "வழங்கல்") ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

இந்த வழங்கலுக்கான விலை வரம்பு ஒரு ஈக்விட்டி பங்கிற்கு ரூ.249 முதல் ரூ.263 வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது (தி "பிரைஸ் பேண்ட்").

பணியாளர் இட ஒதுக்கீட்டுப் பகுதியில் ஏலம் எடுக்கும் தகுதியுள்ள ஊழியர்களுக்கு ஒரு ஈக்விட்டி பங்கிற்கு ரூ24 தள்ளுபடி வழங்கப்படுகிறது.

குறைந்த பட்சம் 57 ஈக்விட்டி பங்குகளுக்கும், அதன் பிறகு 57 ஈக்விட்டி பங்குகளின் மடங்குகளிலும் ஏலம் எடுக்கலாம். ("ஏலம்").

எம்எஸ்எம்ஈ கடன் வழங்கல், என் எப் ஐ, நுகர்வோர் கடன், வாகனக் கடன், மலிவு வீட்டு வசதிக் கடன் மற்றும் விவசாயக் கடன் போன்ற அதன் எதிர்கால மூலதனத் தேவைகளைப் பூர்த்தி செய்ய நிகர வருவாயைப் பயன்படுத்தவும் மற்றும் 2025 நிதியாண்டுக்கான மூலதனப் போதுமான அளவுக்கான ஆர்பிஐவிதிமுறைகளுக்கு இணங்குவதை உறுதிசெய்யவும் இந்த நிறுவனம் உத்தேசித்துள்ளது. ("வழங்கலின் நோக்கங்கள்")

லீப்ஃப்ராக் ஃபைனான்சியல் இன்க்லூஷன் இந்தியா (மிமி) லிமிடெட் ஆல் செய்யப்பட்ட 3,844,449 வரையிலான பங்குகள்; ஆக்ஷன் அப்பிரிக்கா-ஏசியா இன்வெஸ்ட்மென்ட் நிறுவனத்தால் செய்யப்பட்ட 1,263,965 வரையிலான ஈக்விட்டி பங்குகள்; 360 ஒன் ஸ்பெஷல் ஆப்போர்சூனிட்டிஸ் ஃபண்ட் ஆல் செய்யப்பட்ட 1,408,918 வரையிலான ஈக்விட்டி பங்குகள் (முன்னர் ஐஐஎப்எல் ஸ்பெஷல் ஆப்போர்சூனிட்டிஸ் ஃபண்ட் என அறியப்பட்டது); எய்ட் ரோட்ஸ் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் மொரிஷியஸ் மிமி லிமிடெட் (முன்னர் எப் ஐ எல் கேபிட்டல் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் (மொரிஷியஸ்) மிமி லிமிடெட் என அறியப்பட்டது) ஆல் செய்யப்பட 1,746,950 வரையிலான ஈக்விட்டி பங்குகள் துவாரா டிரஸ்ட் ஆல் செய்யப்பட்ட 1,344,828 வரையிலான ஈக்விட்டி பங்குகள் (அதன் கார்ப்பரேட் டிரஸ்டி, துவாரா ஹோல்டிங்ஸ் ஆல் பிரதிநிதித்துவப்படுத்துகிற (முன்னர் துவாரா ஹோல்டிங்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் துவாரா டிரஸ்டிஷிப் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் என அறியப்பட்டது) ; மற்றும் சுமிட்டோமோ மிட்சுயி பேங்கிங் கார்ப்பரேஷன் ஆல் செய்யப்பட்ட 923,210 வரையிலான ஈக்விட்டி பங்குகள் ஆகியவற்றை உள்ளடக்கிய 10,532,320 வரையிலான ஈக்விட்டி பங்குகளை விற்பனை செய்வதற்கான வழங்கல். ("விற்பனை பங்குதாரர்கள்" மற்றும் விற்பனை செய்யும் பங்குதாரர்களால் ஈக்விட்டி பங்குகளை விற்பனை செய்வதற்கான வழங்கல், "விற்பனைக்கான வழங்கல்").

செப்டம்பர் 9, 2024 தேதியிட்ட நிறுவனத்தின் ரெட் ஹெர்ரிங் ப்ராஸ்பெக்டஸ் மூலம் இந்த ஈக்விட்டி பங்குகள் இந்தியாவில் சென்னையில் உள்ள தமிழ்நாடு ரெஜிஸ்ட்ரார் ஆஃப் கம்பெனீஸ் உடன் தாக்கல் செய்யப்பட்டன. ("ஆர் ஓ சி")

இந்த ரெட் ஹெர்ரிங் ப்ராஸ்பெக்டஸ் மூலம் வழங்கப்படும் ஈக்விட்டி பங்குகள் பிஎஸ்இ லிமிடெட் ("பிஎஸ் ஈ") மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆஃப் இந்தியா லிமிடெட் (மற்றும் பிஎஸ் ஈ உடன் இணைந்து "என் எஸ் ஈ", "ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச்கள்") ஆகியவற்றில் பட்டியலிட முன்மொழியப்பட்டுள்ளன. வழங்கலின் நோக்கங்களுக்காக என் எஸ் ஈ ஆனது நியமிக்கப்பட்ட பங்குச் சந்தையாகும். ("லிஸ்டிங் விவரங்கள்").

# சாம்சங், 'சால்வ் ஃபார் டுமாரோ' 2024-க்கான மாபெரும் இறுதிப் போட்டிக்கான 10 இறுதி அணிகளை அடையாளப்படுத்துகிறது




சென்னை, 14 செப் 2024: சாம்சங் இந்தியா, தனது முதன்மையான சி எஸ் ஆர் திட்டமான 'சால்வ் ஃபார் டுமாரோ' 2024-இன் முதல் 10 அணிகளை இன்று அறிவித்துள்ளது. இப்போது இறுதிப் போட்டிக்கு முன்னேறும் இந்த சிறந்த 10 அணிகள், சாம்சங் தலைமை மற்றும் பிற முக்கிய தொழில்துறை தலைவர்கள் அடங்கிய ஒரு மாபெரும் நடுவர் மன்றத்தின் முன் தங்கள் தனித்துவமான புத்தாக்கங்களை சமர்ப்பிப்பார்கள். அசாமில் உள்ள கோலாகாட் மற்றும் கம்ரூப் ரூரல், ராஜஸ்தானின் ஜலாவர், கர்நாடகாவின் உடுப்பி மற்றும் சத்தீஸ்கரில் உள்ள பிலாஸ்பூர் உள்ளிட்ட நாட்டின் தொலைதூரப் பகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்களானவை, இத்திட்டத்தின் ஆழமான பிராந்திய ஊடுருவலை எடுத்துக்காட்டுகின்றன.

இந்த இறுதிப் போட்டியாளர்கள், சாம்சங் நடுவர் மன்ற உறுப்பினர்களுக்கு பல சுற்றுகளில் சுருக்கமான செயல் விளக்கக்காட்சிகள் காட்டியது மற்றும் சாம்சங் மற்றும் ஃபவுண்டேஷன் ஃபார் இன்னோவேஷன் & டெக்னாலஜி டிரான்ஸ்ஃபர் (எஃப் ஐ டி டி), ஐ ஐ டி டெல்லி ஆகிவற்றின் நிபுணர்களின் வழிகாட்டுதல் அமர்வுகள் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு கடுமையான தேர்வு செயல்முறையை கடந்து வந்தனர். இவற்றில் 20 அணிகள் ஒவ்வொன்றும், அவற்றின் முன்மாதிரி உருவாக்கத்திற்காக வெகுமதியாக 20,000 ரூபாய் மானியமாகப் பெற்றன. இவை தவிர, யூத் டிராக்-கின் பட்டியலிடப்பட்ட அணிகள், சமீபத்திய மாடலில் சாம்சங் காலக்ஸி மடிக்கணினிகளைப் பெற்ற அதே வேளையில் , பள்ளி டிராக்-கின் அணிகள் காலக்ஸி டேப்-களைப் பெற்றன.

இந்நிகழ்ச்சியின் 3வது பதிப்பில், 'சமூகம் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி' மற்றும் 'சுற்றுச்சூழல் மற்றும் வளங்குன்றாமை' ஆகிய இரண்டு முக்கிய கருப்பொருட்களின் கீழ் மாணவர்கள் தங்கள் அறிவுப்பூர்வமான யோசனைகளைச் சமர்ப்பித்தனர். இப்பரந்த கருப்பொருட்களின் கீழ், பெரும்பாலான யோசனைகள், பின்தங்கிய சமூகங்களுக்கான கல்வி மற்றும் வள அணுகல், அனுபவ கற்றலில் உள்ள சவால்கள், டிஜிட்டல் கல்வியறிவு, நீர் சிக்கனம் மற்றும் ஆர்சனிக் மாசுபாடு போன்ற முக்கிய பிரச்சினைகளை கையாள்வதில் கவனம் செலுத்துகின்றன.

மாணவர்களுக்கு, வழிகாட்டுதல், நிபுணர் அமர்வுகள் மற்றும் வெளிப்பாடு ஆகியவற்றை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்ட 'இன்னோவேஷன் வாக்'-கிலும் இந்த அணிகள் பங்கேற்றன. இந்நிகழ்வானது, பெங்களூரு மற்றும் நொய்டாவில் உள்ள சாம்சங் ஆர் & டி மையங்கள் மற்றும் குருகிராமில் உள்ள பிராந்திய தலைமையகம் உள்ளிட்ட பல்வேறு சாம்சங் அலுவலகங்களில் நடைபெற்றது. மேலும், தயாரிப்பு மேம்பாட்டு செயல்முறைக்கு நுண்ணறிவுகளை வழங்குவதில் கருவியாக இருந்த அமர்வுகளில் மாணவர்கள் பங்கேற்றனர்; இது அவர்களின் யோசனைகளை மேம்படுத்தவும் உதவியது. இதைத் தொடர்ந்து ஒரு நேஷனல் பிட்ச் ஈவண்ட் நடைபெற்றது. இதில் இறுதி 10 அணிகள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

"தேசம் முழுவதிலுமிருந்து பட்டியலிடப்பட்ட இந்த 10 குழுக்களின் மிகவும் குறிப்பிடத்தக்க பயணங்களைக் காண்பதில் நாங்கள் மிகுந்த உற்சாகமடைகிறோம். 'சால்வ் ஃபார் டுமாரோ' எனும் இந்த நிகழ்ச்சியானது, அனைத்து பங்கேற்பாளர்களையும் படைப்பாற்றல் மற்றும் திறனின் எல்லைகளை விரிவுபடுத்த இயலச்செய்தது; முடிவாக, அவர்களை இறுதிப் போட்டிக்கு மட்டுமல்ல, அவர்களின் எதிர்கால முயற்சிகளுக்கும் தயார்படுத்துகிறது. இந்நிகழ்ச்சியின் மூலம், பங்கேற்பாளர்களை தொழில்நுட்ப திறன்களுடன் சித்தப்படுத்தவும், அவர்களுக்கு நம்பிக்கையை ஊட்டவும், புதுமையாக சிந்திப்பதற்கு உதவுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளோம். நாங்கள் இந்த மாபெரும் இறுதிப் போட்டியை நிகழ்வை நெருங்கும்போது, இப்பங்கேற்பாளர்கள் தங்கள் தனித்துவமான யோசனைகளை எவ்வாறு உயிர்ப்பித்து நேர்மறையான சமூக மாற்றத்தை உருவாக்குவார்கள் என்பதைப் பார்க்க நாங்கள் உற்சாகமடைகிறோம்," என்று சாம்சங் தென்மேற்கு ஆசியாவின் கார்ப்பரேட் வைஸ் பிரசிடென்ட் எஸ் பி சுன் கூறினார்.

"இந்த இளம் மூளைகள் வெளிப்படுத்தும் புதுமை மற்றும் படைப்பாற்றல் உண்மையிலேயே ஊக்கமளிக்கிறது. சாம்சங்கின் 'சால்வ் ஃபார் டுமாரோ' 2024 எனும் நிகழ்ச்சியானது, இந்த மாணவர்களுக்கு அவர்களின் கருத்துக்களை செம்மைப்படுத்தி அவற்றை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லவும், மற்றும் வளர்த்தெடுக்கவும் தேவையான சரியான வழிகாட்டுதல் மற்றும் பயிற்சியை வழங்குவதில் ஒரு கணிசமான பங்களிப்பாளராக இருந்து வருகிறது. எஃப் ஐ டி டி-ஆனது, இளம் புத்தாக்கிகள், தங்கள் எதிர்கால பயணங்களில் ஒருங்கிணைந்து இருக்கும் திறன்கள் மற்றும் நம்பிக்கைகளுடன் தன்மேம்பாடடையும் இந்த மதிப்புவாய்ந்த தளத்தின் ஒரு பகுதியாக இருப்பதில் பெருமை கொள்கிறது," என்று ஐ ஐ டி டெல்லியின் எஃப் ஐ டி டி இன் நிர்வாக இயக்குனர் டாக்டர் நிகில் அகர்வால் கூறினார்.

'சால்வ் ஃபார் டுமாரோ' 2024 நிகழ்ச்சியின் இப்பதிப்பில், மணிப்பூரில் உள்ள இம்பால், மேகாலயாவின் கிழக்கு காசி மலைகள் மற்றும் சத்தீஸ்கரின் பிலாஸ்பூர் உள்ளிட்ட நாட்டின் சில தொலைதூரப் பகுதிகளைச் சேர்ந்தவர்களும் பங்கேற்றுள்ளனர். அனைத்து மாணவர்களும் சமூகப் பிரச்சினைகளைத் தீர்க்கும் நோக்கில் யோசனைகளை உருவாக்க உத்வேகம் கொண்டிருந்தனர்; குறிப்பாக, இவர்கள் பின்தங்கிய சமூகங்களில் உள்ளவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்துவதற்கான சாம்சங்கின் நோக்கத்தை நிறைவேற்றுபவர்களாவர்.

# இன்றைய முக்கிய நிகழ்வுகள்

சென்னை, 14 செப் 2024: சிறப்பு பிரச்சாரம் 4.0 -த்துக்கு சட்ட விவகாரங்கள் துறை முன்னேற்பாடு. ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் நடைபெற்ற பிரிக்ஸ் மாநாட்டில், கலாச்சாரத்தை தனித்த நிலையான வளர்ச்சி இலக்குகளாக அங்கீகரிக்க வேண்டியதன் அவசியத்தை இந்தியா மீண்டும் வலியுறுத்தியது.

வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலனுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி முன்னுரிமை அளித்து வருகிறார். விவசாயிகளின் நலனுக்காக அரசு சில பெரிய முடிவுகளை எடுத்துள்ளது: திரு. சிவராஜ் சிங் சவுகான். லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகளுக்கான பொதுக் கொள்கை மற்றும் நல்லாட்சி குறித்த திட்டத்தை நல்லாட்சிக்கான தேசிய மையம் நிறைவு செய்தது. அலுவல் மொழி இந்தி 75-வது ஆண்டு கொண்டாட்டம் - இந்தி தினத்தை முன்னிட்டு மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா நினைவு தபால் தலையை வெளியிட்டார். விவசாயிகளின் நலனுக்காக அனைத்து முயற்சிகளும், முடிவுகளும் எடுக்கப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு விவசாயிகளின் நலனுக்கு முக்கியத்துவம் அளித்து வருவதாகவும், விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைப்பதை உறுதி செய்வதற்காக ஏற்றுமதியை அதிகரித்து வருவதாகவும் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

ஓணம் பண்டிகையை முன்னிட்டு குடியரசுத் தலைவர் வாழ்த்து. பிரேசிலின் குயாபாவில் நடைபெற்ற ஜி20 வேளாண் அமைச்சர்கள் கூட்டத்தில் இந்தியா பங்கேற்பு.

வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறையின் அனைத்து அலுவலகங்களும் செப்டம்பர் 17 முதல் அக்டோபர் 2 வரை 'தூய்மையே சேவை 2024 பிரச்சாரத்தைக்' கொண்டாட முடிவு செய்துள்ளன. குஜராத்தின் ராஜ்கோட்டில் மேற்கு மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களுடன் 3 வது பிராந்திய கூட்டத்திற்கு டாக்டர் மன்சுக் மாண்டவியா தலைமை தாங்குகிறார். செப்டம்பர் 15-17 தேதிகளில் ஜார்க்கண்ட், குஜராத் மற்றும் ஒடிசாவுக்கு பிரதமர் பயணம். பாசுமதி அரிசியின் அடிப்படை விலை நீக்கம். இந்தி தினத்தை முன்னிட்டு பிரதமர் வாழ்த்து. இந்தி தினம் 2024 குறித்த மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷாவின் செய்தி. இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில், தொழில் மற்றும் கல்வி கூட்டாளர்களுடன் முதல் கட்ட மருத்துவ பரிசோதனைகளை முன்னெடுக்க ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டது.

வெங்காயத்தை மானிய விலையில் விற்கும் மத்திய அரசின் முயற்சி விலை வீழ்ச்சியை பிரதிபலிக்கிறது. இந்திய உணவுக் கழகம் தூய்மை பிரச்சாரத்தின் மீது முக்கிய கவனம் செலுத்துகிறது. 2024 அக்டோபர் 2 முதல் 31 வரை தூய்மை மற்றும் நிலுவையில் உள்ள விஷயங்களை தீர்ப்பதற்கான சிறப்பு பிரச்சாரம் 4.0 -ல் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் பங்கேற்கும். குஜராத் மாநிலம் தேகாமில் நீரில் மூழ்கி உயிரிழந்தவர்களுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி இரங்கல். குஜராத் மாநிலம் தேகாமில் நீரில் மூழ்கி உயிரிழந்தவர்கள் குடும்பத்தினருக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி இழப்பீடு அறிவிப்பு. நீர்மூழ்கி கப்பலில் தப்பிக்கும் பயிற்சி வசதி - வினெட்ரா, விசாகப்பட்டினத்தில் தொடங்கப்பட்டது.

விரிவான தூய்மை இயக்கத்தை இந்திய புவியியல் ஆய்வு நிறுவனம் வழிநடத்தும்.

## செலிகார் கேஜெட்ஸ் லிமிடெட் அறிமுகம் செய்யவிருக்கும் பெரிய திரையுடன் பிரீமியம் ஸ்மார்ட் டிவிகள்

சென்னை, 14 செப் 2024: புத்தாக்க தொழில்நுட்ப தீர்வுகளை வழங்குவதில் புகழ்பெற்றிருக்கும் செலிகார் கேஜெட்ஸ் லிமிடெட், லக்ஸரி ஹோம் என்டர்டைன்மெண்ட்-ஐ மறுவரையறை செய்யும் விதத்தில் அதன் ஸ்மார்ட் டிவிகளின் பிரீமியம் ரேஞ்ச் விரைவில் அறிமுகம் செய்யப்படவிருப்பதை பெருமிதத்துடன் அறிவிக்கிறது. பெருநகரங்களிலுள்ள வாடிக்கையாளர்களின் விருப்பங்களை பூர்த்தி செய்யும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த புதிய மாடல்கள், 75", 86", மற்றும் 98" அங்குல அளவுகளில் வெளிவரவிருக்கின்றன. இதன் மூலம் டிவிகளுக்கான உயர்நிலை சந்தையில் செலிகார் வலுவாக கால்பதிக்கிறது.

நாட்டின் இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் தனது பிரீமியம் ஸ்மார்ட் டிவிகளுக்கு கிடைத்த அபரிமிதமான வெற்றியைத் தொடர்ந்து பெருநகரங்களில் இவற்றை அறிமுகம் செய்யும் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்ப்பது மட்டுமே பொழுதுபோக்குவதற்கான ஒரே வழிமுறையாக இல்லாத இக்காலகட்டத்தில், செலிகார்-ன் சமீபத்திய உயர்நிலை ஸ்மார்ட் டிவிகள் புத்தாக்க தொழில்நுட்பம் மற்றும் நவீனத்துவ ஸ்டைலின் நிகரற்ற கலவையை வழங்குகின்றன. ஒவ்வொரு மாடலுமே உங்களது வீட்டின் ஹாலில் அற்புதமான ஒலி அனுபவத்தையும் மற்றும் வியப்பில் ஆழ்த்துகிறவாறு மிக தெளிவான 4கே படங்களையும் வழங்குவதற்கென வடிவமைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வாடிக்கையாளரின் மனதையும், இதயத்தையும் எளிதாக வெல்வதற்காக தேசிய அளவில் புகழ்பெற்ற ரீடெய்ல் பெருநிறுவனங்களோடு உத்தி வாய்ந்த ஒத்துழைப்பையும் செலிகார் கேஜெட்ஸ் லிமிடெட் மேற்கொண்டிருக்கிறது. முக்கியமான பெருநகரங்களில் தொழில்நுட்ப சாதனங்கள் மீது பேரார்வம் கொண்டிருக்கும் நுகர்வோர்கள் இந்த உயர்நிலை ஸ்மார்ட் டிவிகளை எளிதில் பெறுவதை உறுதி செய்வதற்காக பிரபலமாக அறியப்படும் பெரிய வடிவிலான ரீடெய்ல் பார்ட்னர்களுடன் இணைந்து இந்த ஸ்மார்ட் டிவியின் விற்பனையை செலிகார் மேற்கொள்ளும். நுகர்வோர் எலக்ட்ரானிக்ஸ் தொழில்துறையானது கடும் போட்டி நிகழ்ந்ததாக எப்போதும் புதிய சவால்களை முன்வைக்கிறது என அடிக்கடி கூறப்படுகிறது. எலக்ட்ரானிக்ஸ் செயற்பிரிவானது மாறிவருவது போலவே வாடிக்கையாளர்களின் தேவைகளும் மாற்றம் கண்டு வருகின்றன. தங்களது வீட்டில் சௌகரியமாக இருந்து கொண்டே தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும், திரைப்படங்களையும் கண்டு களிப்பதை மக்கள் விரும்புவது அதிகரித்து வருவதால் பெரிய அளவு திரை கொண்ட ஸ்மார்ட் டிவிகளுக்கான தேவை கணிசமான அளவு சமீப காலங்களில் உயர்ந்திருக்கிறது. சந்தையின் மாறிவரும் இப்போக்கிற்கு உரிய பதில்வினையாக தனது வாடிக்கையாளர்களின் விருப்பங்களை பூர்த்தி செய்கிறவாறு ஸ்மார்ட் டிவிகளின் பிரீமியம் ரேஞ்சை அறிமுகம் செய்யும் ஒரு மூலோபாய திட்டத்தை செலிகார் உருவாக்கியிருக்கிறது. செலிகார் கேஜெட்ஸ் லிமிடெட்-ன் நிறுவனரும், நிர்வாக இயக்குநருமான திரு. ரவி அகர்வால் இது தொடர்பாக பேசுகையில், "பிரீமியம் ஸ்மார்ட் டிவி சந்தையில் நுழைந்திருப்பதன் மூலம் தரம் மற்றும் புத்தாக்கமான எங்கள் அர்ப்பணிப்பை நாங்கள் செயல்வடிவில் வலுவாக நிரூபிக்கிறோம். வெறுமனே ஒரு தொலைக்காட்சி பெட்டி என்பதற்கு பதிலாக மிக சிறப்பான அனுபவத்தையே எமது வாடிக்கையாளர்கள் விரும்புகின்றனர் என்பதை நாங்கள் அறிந்திருக்கிறோம். எமது இந்த புதிய தொகுப்பின் அறிமுகத்தின் வழியாக இத்தேவைகளை நாங்கள் சிறப்பாக பூர்த்தி செய்கிறோம்; அதுமட்டுமன்றி தரமான ஹோம் என்டர்டைன்மெண்ட் என்பதன் பொருள் வரையறைக்கான தரஅளவுகோலையும் நாங்கள் இதன் மூலம் உயர்த்துகிறோம்" என்று கூறினார்.

## பிசி ஜுவல்லர்ஸ்-ன் ஒரு நேர தீர்வு முன்வரைவு திட்டத்தை ஏற்றுக் கொண்டிருக்கும் கோட்டக் மஹிந்திரா வங்கி!

சென்னை, 14 செப் 2024: இந்தியாவில் அதிவேகமாக வளர்ச்சி கண்டு வரும் ஆபரண ரீடெய்ல் சங்கிலி தொடர் நிறுவனமான பிசி ஜுவல்லர் லிமிடெட், தன்னால் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு நேர தீர்வு (ஓ டி எஸ்) முன்வரைவு திட்டத்திற்கு கோட்டக் மஹிந்திரா வங்கி அதன் ஒப்புதலை வழங்கியிருப்பதாக அறிவித்திருக்கிறது. நிலுவையிலிருந்த கடன் பொறுப்பை தீர்ப்பதற்கு ஒரு நேர தீர்வு திட்ட (ஓ டி எஸ்) செயல்முறையை இந்நிறுவனம் தேர்வு செய்திருந்தது. வங்கியால் ஒப்புதலளிக்கப்பட்ட ஒரு நேர தீர்வு திட்டத்தின் வரையறைகள் மற்றும் நிபந்தனைகளுள் இந்த செட்டில்மெண்ட்-ன் கீழ் செலுத்தக்கூடிய ரொக்க தொகை மற்றும் ஈக்விட்டி கூறுகள், அடமானம் வைக்கப்பட்ட பிணை ஆவணங்கள் மற்றும் சொத்துக்களின் விடுவிப்பு ஆகியவை உள்ளடங்கும்.

மேலும், வருமான வரி துறையிடமிருந்து ரூ. 67.54 கோடி என்ற தொகை ரீஃபண்டாக திரும்ப வழங்கப்பட்டிருக்கிற தகவலையும் இந்நிறுவனம் தெரிவித்திருக்கிறது. 2024 செப்டம்பர் 06-ம் தேதியன்று இந்நிறுவனத்தின் வங்கி கணக்கில் இத்தொகை வரவு வைக்கப்பட்டிருக்கிறது.

இதற்கு முன்னதாக, கியூ1எஃப்ஒய்25 காலஅளவின்போது, கடந்தகால தளர்ச்சியிலிருந்து விடுபட்டு சிறப்பான வளர்ச்சி எட்டப்பட்டிருப்பதை இந்நிறுவனம் பெருமிதத்துடன் அறிவித்திருந்தது. வாடிக்கையாளர் நம்பிக்கை மற்றும் நற்பெயரையும் இந்நிறுவனம் மீண்டும் பெற தொடங்கியிருப்பதால், வருவாய் வளர்ச்சியையும் மற்றும் இலாபமீட்டலில் முன்னேற்றத்தையும் இது விளைவித்திருக்கிறது.

2024 ஜூன் 30 அன்று முடிவடைந்த காலாண்டின்போது (ஒருங்கிணைக்கப்பட்ட) வருவாய், முந்தைய ஆண்டின் அளவைவிட 499% வளர்ச்சியுடன் ரூ. 401 கோடியாக பதிவாகியிருக்கிறது. ரூ. 84.64 கோடியாக வரிக்கு முந்தைய இலாபம் இருக்கிறது. இயக்க இலாபமானது (பி பி டி-யிலிருந்து வருமான வரி ரீஃபண்ட் மீதான வட்டியை கழித்ததற்கு பிறகு) ரூ.49 கோடியாக (கியூ1எஃப்ஒய்25) பதிவாகியிருக்கிறது. கியூ1எஃப்ஒய்24-ல் ரூ. 178.14 கோடி இழப்பு இருந்த நிலையில் வரிக்குப்பிந்தைய இலாபம் கியூ1எஃப்ஒய்25-ல் 154.62 கோடியாக சிறப்பான முன்னேற்றம் கண்டிருக்கிறது. ஈ பி எஸ் (ஒரு ஈக்விட்டி பங்கிற்கான ஈட்டம், ரூ. 3.35 ஆக இருக்கிறது. இந்நிறுவனத்திற்கு எதிராக ஐ பி சி-ன் பிரிவு 7-ன் கீழ் நிறுவனத்தை திவாலானதாக அறிவிக்க வேண்டுமென்று கோரி டெல்லி என் சி எல் டி முன்பாக தாக்கல் செய்திருந்த வழக்கை ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியாவும் திரும்ப பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பத்தை தாக்கல் செய்திருந்தது. 2024 ஏப்ரல் 30 தேதியிட்ட தனது ஆணையின் வழியாக மேற்கண்ட மனு திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டதாக என் சி எல் டி தெரிவித்திருக்கிறது. ஆகவே, சட்ட ரீதியான பிரச்சனைகள் விரைவில் முடிவுக்கு வரும் என்று இந்நிறுவனம் நம்புகிறது. இப்போது வளர்ச்சி மற்றும் இலாபமீட்டல் என்ற பாதையில் துடிப்போடு முன்னேற்றம் காண இந்நிறுவனம் தீவிரமாக செயலாற்றி வருகிறது.

## ஆர்கேட் டெவலப்பர்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் ஆரம்பப் பொது வழங்கல் செப்டம்பர் 16, 2024 அன்று திறக்கப்படும்

சென்னை, 14 செப் 2024: தேர்ந்தெடுக்கப்பட்ட நுண்-சந்தைகளில் வழங்கல் அடிப்படையில் முன்னணி போட்டியாளர் மற்றும் முதல் 10 டெவலப்பர்கள் மத்தியில் சிறந்த நிறுவனம், மற்றும் எம் எம் ஆர், மகாராஷ்டிரா (ஆதாரம்: அனராக் அறிக்கை) இல் நிறுவப்பட்ட டெவலப்பரான இந்த நிறுவனம் அதன் ஈக்விட்டி பங்குகளின் ("வெளியீடு") ஆரம்பப் பொது வழங்கல் செப்டம்பர் 16, 2024 திங்கள் அன்று திறப்பதற்கு முன்மொழிகிறது. ஆங்கர் முதலீட்டாளர் ஏலத் தேதி ஆனது ஏலம்/வெளியீடு தொடங்கும் தேதிக்கு முந்தைய ஒரு வேலை நாளாய் இருக்கும் அதாவது செப்டம்பர் 13, 2024. ஏலம்/வெளியீடு முடிவுறும் தேதி செப்டம்பர் 19, 2024 வியாழன் அன்று இருக்கும்.

இந்த வெளியீட்டின் விலை வரம்பு ஒரு ஈக்விட்டி பங்கிற்கு ரூ.121 இலிருந்து ரூ.128 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. குறைந்தபட்சம் 110 ஈக்விட்டி பங்குகள் மற்றும் அதன்பிறகு 110 ஈக்விட்டி பங்குகளின் மடங்குகளுக்கு ஏலங்கள் எடுக்கப்படலாம். இந்த வெளியீடானது, ரூ. 4,100.00 மில்லியன் ("புதிய வெளியீடு") வரையிலான மொத்த ஈக்விட்டி பங்குகளின் எண்ணிக்கை வரையிலான ஒரு புதிய வெளியீட்டைக் கொண்டுள்ளது.

இந்த வெளியீட்டின் நிகர வருவாயை நிதி மேம்பாட்டு செலவுகள் மற்றும் இன்னும் அடையாளம் காணப்படவேண்டிய ரியல் எஸ்டேட் திட்டங்களுக்கு நிலம் கையகப்படுத்துதலுக்கு நிதியளித்தல் மற்றும் பொது நிறுவன நோக்கங்களுக்காகப் பயன்படுத்த இந்த நிறுவனம் முன்மொழிகிறது.

எஸ்ஈபீஐ ஐசிடிஆர் ஒழுங்குமுறைகளின் 31வது விதிமுறையுடன் படிக்கப்பட்ட பத்திர தொடர்புகள் (ஒழுங்குமுறை) விதிகள், 1957 (எஸ்சிஆர்ஆர்) விதி 19(2)(பி) இன் அடிப்படையில் இந்த வழங்கல் உருவாக்கப்பட்டுள்ளது. எஸ்ஈபீஐ ஐசிடிஆர் விதிமுறைகளின் விதிமுறை 6(1) இன் படி, புக் பில்டிங் செயல்முறையின் மூலம் இந்த வெளியீடு செய்யப்படுகிறது, இதில் 50% க்கும் அதிகமான தொகையானது தகுதிவாய்ந்த நிறுவன வாங்குபவர்களுக்கு (கியூ ஐ பீ எஸ்) விகிதாசார அடிப்படையில் ஒதுக்கீட்டிற்குக் கிடைக்கும் (அந்தப் பகுதி கியூஐபீ பகுதி என குறிப்பிடப்படுகிறது), நிறுவனம், பிஆர் எல் எம் உடன் கலந்தாலோசித்து, எஸ்ஈபீஐ ஐசிடிஆர் விதிமுறைகளுக்கு (ஆங்கர் முதலீட்டாளர் பகுதி) இணங்க, 60% வரை கியூஐபீ பகுதியை ஆங்கர் முதலீட்டாளர்களுக்கு ஒதுக்கலாம். செபி ஐசிடிஆர் விதிமுறைகளுக்கு இணங்க, ஆங்கர் முதலீட்டாளர்களுக்கு (ஆங்கர் முதலீட்டாளர் ஒதுக்கீடு விலை) ஒதுக்கீடு செய்யப்படும் விலை அல்லது அதற்கு மேல் உள்நாட்டு மியூச்சுவல் ஃபண்டுகளில் இருந்து பெறப்படும் செல்லுபடியாகும் ஏலங்களுக்கு உட்பட்டது இதில் மூன்றில் ஒரு பங்கு உள்நாட்டு மியூச்சுவல் ஃபண்டுகளுக்கு மட்டுமே ஒதுக்கப்படும். விதிமுறைகள். ஆங்கர் முதலீட்டாளர் பகுதியில் குறைவான சந்தா அல்லது ஒதுக்கீடு செய்யப்படாவிட்டால், மீதமுள்ள ஈக்விட்டி பங்குகள் நிகர கியூஐபீ பகுதியில் சேர்க்கப்படும். மேலும், நிகர கியூஐபீ பகுதியின் 5% பரஸ்பர நிதிகளுக்கு மட்டுமே விகிதாசார அடிப்படையில் ஒதுக்கீட்டிற்காக கிடைக்கும், மேலும் நிகர கியூஐபீ பகுதியின் எஞ்சிய பகுதியானது, வெளியீட்டு விலை அல்லது அதற்கு மேல் பெறப்படும் செல்லுபடியாகும் ஏலங்களுக்கு உட்பட்டு, மியூச்சுவல் ஃபண்டுகள் உட்பட, அனைத்து கியூஐபீ ஏலதாரர்களுக்கும் (ஆங்கர் முதலீட்டாளர்களைத் தவிர) விகிதாசார அடிப்படையில் ஒதுக்கீடு செய்யக் கிடைக்கும். இருப்பினும், மியூச்சுவல் ஃபண்டுகளின் மொத்தக் கோரிக்கை நிகர கியூஐபீ பகுதியின் 5% க்கும் குறைவாக இருந்தால், மியூச்சுவல் ஃபண்ட் பகுதிக்கு ஒதுக்கீடு செய்யக்கிடைக்கும் இருப்பு ஈக்விட்டி பங்குகள், அனைத்து கியூஐபீ களுக்கும் விகிதாசார ஒதுக்கீட்டிற்காக மீதமுள்ள நிகர கியூஐபீ பகுதியுடன் சேர்க்கப்படும்.

## வென்டிவ் ஹாஸ்பிடாலிட்டி லிமிடெட் செபியுடன் டி ஆர் எச் பி-ஐ தாக்கல் செய்கிறது

சென்னை, 14 செப் 2024: வணிக மற்றும் ஓய்வுப் பிரிவுகளில் ஆடம்பர வழங்கல்களில் முதன்மை கவனம் செலுத்தும் விருந்தோம்பல் சொத்து உரிமையாளரான வென்டிவ் ஹாஸ்பிடாலிட்டி லிமிடெட் (முன்னர் ஐசிசி ரியால்ட்டி (இந்தியா) பிரைவேட் லிமிடெட் என அறியப்பட்டது), அதன் வரைவு ரெட் ஹெர்ரிங் ப்ராஸ்பெக்டஸை ("டி ஆர் எச் பி") சந்தை கட்டுப்பாட்டாளரான செக்யூரிட்டீஸ் அண்ட் எக்ஸ்சேஞ்ச் போர்டு ஆஃப் இந்தியா (செபி) உடன் தாக்கல் செய்துள்ளது.

இந்த நிறுவனத்தின் ஆரம்பப் பொது வழங்கல் ஒவ்வொன்றும் ரூ.1 முகமதிப்புள்ள மொத்தம் ரூ.2000 கோடி வரையிலான ஈக்விட்டிப் பங்குகளின் ஒரு புதிய வெளியீட்டைக் கொண்டுள்ளது. மொத்த வழங்கல் அளவு, ஒவ்வொன்றும் ரூ.1 மதிப்புள்ள ஈக்விட்டி பங்குகள் வரை மொத்தமாக ரூ.2000 கோடி வரை உள்ளடக்கும்.

முன்பு ஐசிசி ரியாலிட்டி (இந்தியா) பிரைவேட் லிமிடெட் என அறியப்பட்ட வென்டிவ் ஹாஸ்பிடாலிட்டி லிமிடெட், புனே வை தளமாகக் கொண்ட ஒரு ரியல் எஸ்டேட் நிறுவனமான பஞ்ச்ஷில் ரியால்ட்டி இன் விருந்தோம்பல் பிரிவாக நிறுவப்பட்டது, இது வணிக, சில்லறை, சொகுசு குடியிருப்பு மற்றும் தரவு மையப் பிரிவுகளில் முன்னிலையில் உள்ளது. 2017 ஆம் ஆண்டில், நிறுவனத்தின் 50% பங்குகளை கையகப்படுத்தியதன் அடிப்படையில், பிளாக்ஸ்டோன் நிறுவனத்தின் துணை நிறுவனமான பிஆர்ஈ ஆசியா (முன்னர் எக்ஸ்சாண்டர் இன்வெஸ்ட்மென்ட் ஹோல்டிங் எக்ஸ்விஐ லிமிடெட் என அறியப்பட்டது), நிறுவனத்தில் 50% பங்குதாரர் ஆனது.

வென்டிவ் ஹாஸ்பிடாலிட்டி லிமிடெட், வணிகம் மற்றும் ஓய்வுப் பிரிவுகளில் ஆடம்பர வழங்கல்களில் ஒரு முதன்மையான கவனம் கொண்ட ஒரு விருந்தோம்பல் சொத்து உரிமையாளராகும். அனைத்து விருந்தோம்பல் சொத்துக்களும் உரிமம் பெற்ற மேரியட், ஹில்டன், மைனர் மற்றும் அட்மாஸ்பியர் உள்ளிட்ட உலகளாவிய ஆபரேட்டர்களால் இயக்கப்படுகின்றன அல்லது உரிமம் பெற்றவையாக இருக்கின்றன. இந்த ஆடம்பர விருந்தோம்பல் சொத்துக்களில் ஜெடபிள்யூ மேரியட், புனே, தி ரிட்ஸ்-கார்ல்டன், புனே, கான்ராட், மாலத்தீவுகள், அனந்தரா, மாலத்தீவுகள் மற்றும் அட்மாஸ்பியர் இன் ராயா, மாலத்தீவுகள் ஆகியவை அடங்கும். மார்ச் 31, 2024 நிலவரப்படி, இந்த போர்ட்ஃபோலியோ இந்தியா மற்றும் மாலத்தீவில் 2007 இல் செயல்படத் தொடங்கியபோது இருந்த 83 அறைகளுடன் ஒப்பிடும்போது ஆடம்பர, உயர்தர மற்றும் மேல்தட்டு பிரிவுகளில் மொத்தம் 2,036 அறைகளுடன் 11 செயல்பாட்டு விருந்தோம்பல் சொத்துக்களை உள்ளடக்கியது.

வென்டிவ் ஹாஸ்பிடாலிட்டி லிமிடெட் பல்வேறு புவியியல் மற்றும் பல்வேறு விருந்தோம்பல் பிரிவுகளில் முக்கிய ஹோட்டல் சொத்துக்களை உருவாக்கி கையகப்படுத்துவதில் ஒரு நிரூபிக்கப்பட்ட சாதனைப் பதிவைக் கொண்டுள்ளது. உருவாக்கம் மற்றும் கையகப்படுத்தல்-தலைமையிலான விரிவாக்கம் மூலம், அவர்கள் கடந்த சில ஆண்டுகளில் போர்ட்ஃபோலியோவை விரிவாக்கி, பெங்களூரு, வாரணாசி மற்றும் மாலத்தீவுகள் போன்ற புதிய புவியியல் பகுதிகளுக்குள் நுழைந்துள்ளனர். ஆடம்பர விருந்தோம்பல் சொத்துக்களுக்கு மேலதிகமாக, அவர்கள் உயர் மேல்தட்டு மற்றும் மேல்தட்டு பிரிவுகளில் சொத்துக்களை உருவாக்கி கையகப்படுத்தியிருக்கிறார்கள். இது இந்தியாவில் புனே மற்றும் பெங்களூருவின் வணிக மையங்களில் கூடுதல் வழங்கல்களாக செயல்படுகிறது. மார்ச் 31, 2024 நிலவரப்படி, அவர்களால் உருவாக்கப்பட்ட 1,331 அறைகளுடன் ஏழு விருந்தோம்பல் சொத்துக்கள் மற்றும் அவர்களால் கையகப்படுத்தப்பட்ட 705 அறைகள் கொண்ட நான்கு விருந்தோம்பல் சொத்துக்களை இந்த செயல்பாட்டு போர்ட்ஃபோலியோ கொண்டுள்ளது. எங்கள் விரிவாக்கத்தின் ஒரு பகுதியாக, அவர்கள் 2019 முதல் 1,070 அறைகளைச் சேர்த்துள்ளனர், இது மார்ச் 31, 2024 நிலவரப்படி போர்ட்ஃபோலியோவில் உள்ள அறைகளின் எண்ணிக்கையில் 50%க்கும் அதிகமாக உள்ளது.